கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),

திருமங்கலம்.

2026ம் வருடம் மார்ச் மாதம் 07ம் தேதி சனிக்கிழமை

இடைநிலை மனு எண்.1/2020

இன்

அசல் வழக்கு எண்.7/2020

-----

1) சாயிலட்சுமி

2) வினோத்குமார் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1) ராஜேந்திரன்

2) ராஜலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 25.02.2026ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இவ்வழக்கு எதிர்மனுதாரர்களோ, அவர்களது வகையாட்களோ தாவாச் சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கு எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என மேற்படியார்கள் மீது தற்காலிக தடை உத்தரவுப் பரிகாரம் வழக்கு முடியும் வரை வழங்கக் கோரியும், அதே காரணத்திற்காக ஒரு இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை</u>** :–

இந்த மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) அசல் வழக்கானது, பிரதிவாதிகளோ, மேற்படியார்கள் வகையாட்களோ தாவாச் சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தை எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என மேற்படியார்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி

வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே, காரணத்திற்காக ஒரு இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் அவர்கள் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிருரையாக பாவித்துக் கொள்ள வேண்டுமென குறிப்பாணை தாக்கல் செய்து இம்மனுவினை அனுமதிக்கக்கூடாது என ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

**3. தீர்வு:–**

ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது.

3.1) மேலும், கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர்கள் நிவாரணம் பெற வேண்டும் என்றால்,

(i) மனுதாரர் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரருக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்றும், Balance of convenience மனுதாரருக்கு

ஆதரவாக உள்ளது என்று நிருபணம் செய்யவேண்டியது அவசியமானதாகும்.

3.2) மேலும், மேற்படி அசல் வழக்கின் பரிகாரமானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமாக உள்ள நிலையில், மேற்படி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இடைக்கால மனுவினை அனுமதிக்காததால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பணத்தால் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பால் நிரூபணம் செய்யாததாலும், அசல் வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும், இம்மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும் ஒன்றாக இருப்பதாலும், வழக்குச்சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதை முழு விசாரணைக்கு பின்பு தான் தீர்வு காண இயலும் என்பதால், மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள இடைக்கால தடை உத்தரவு கட்டளை பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 07.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.07 17:38:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**<u>இணைப்பு:-</u>**
**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி –</u>** இல்லை

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 – | 18.09.2018ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் ஆவண எண்.6037/2018 சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.2 – | 18.09.2018ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் ஆவண எண்.6040/2018 சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.3 – | 03.08.2018ம் தேதியிட்ட வெண்ணிலை கிரையப்பத்திரம் அசல். |
| ம.சா.ஆ.4 – | 05.10.2018ம் தேதியிட்ட வில்லங்கச் சான்றிதழ் பதிவிறக்கம் செய்யப்பட்டது. |
| ம.சா.ஆ.5 – | மின் கட்டண ரசீதுகள் (எண்ணம் 5) |
| ம.சா.ஆ.6 – | 31.07.2019ம் தேதியிட்ட பிரதிவாதிகளின் வழக்கறிஞர் 1ம் வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு (சார்பு செய்யப்பட்டது) |

ம.சா.ஆ.7 – 13.08.2019ம் தேதியிட்ட பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்.

ம.சா.ஆ.8 – 15.10.2019 எழுத்துப்பூர்வமான விளக்க மனு நகல்.

ம.சா.ஆ.9 – 17.11.2019ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல்.

ம.சா.ஆ.10 – 07.01.2020ம் தேதியிட்ட 1ம் வாதி பெயரில் அனுப்பப்பட்ட புகார் மனு நகல்.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி –** இல்லை

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**:–

எ.ம.சா.ஆ.1 – 05.12.1975ம் தேதியிட்ட ஆவண எண்.2987/1975 கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

எ.ம.சா.ஆ.2 – 07.05.1980ம் தேதியிட்ட Deed of partnership.

எ.ம.சா.ஆ.3 – 18.12.1980ம் தேதியிட்ட Deed of Release.

எ.ம.சா.ஆ.4 – 05.12.1975ம் தேதியிட்ட ஆவண எண்.2986/1975 கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.07 17:38:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.01/2023
அசல் வழக்கு எண்.7/2020
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 07.03.2026